**மொறட்டுவ பல்கலைக்கழகம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மூலதனப் பொருட்களுக்குரிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 2,155,052 மற்றும் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போதும் பூர்த்தி செய்யப்பட்ட 03 ஒப்பந்தங்களின் நிறுத்திவைத்தல் பணம் ரூபா 2,429,936 என்பன 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை நிறுவனத்தினதும், பொறியியலாளரினதும் பரிந்துரை கிடைக்கப்பெற்றவுடன் அந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை தாமதமின்றி தீர்த்துவைப்பதற்காக செயற்திறனான வேலைத்திட்ட மொன்றை ஸ்தாபித்தல் வேண்டும். |
| (ஆ) | 03 திணைக்களங்களில் சுய நிதி ஈட்டல் பாடநெறிக்காக மாணவர்களை சேர்க்கும் தகுதிகாண் பரீட்சைகளுக்கு தொடர்புபடுத்துவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 10,584,513 தொகை மீளாய்வாண்டின் இறுதியின் போதும் தீர்த்து வைப்பதற்கு தவறி இருந்தது. | மேலும் கண்டறிந்து உரிய செலவினத் தலைப்பு/ அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றப்படும். | தகுதிகாண் பரீட்சைகள் தொடர்பாக சரியாக இனங்கண்டு தாமதமின்றி செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் வாகன பராமரிப்பு தொடர்பான பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இன் 3.1 ஆம் பந்தி | சகல எரிபொருள் பரிசோதனைகளின் பின்னர் 12 மாதகால எல்லையில் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூர அளவு ஓடியதன் பின்னர் என்ற காரணங்களுக்கடையே முதலாவதாக நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 37 வாகனங்களில் 34 வாகனங்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொரோனா தொற்றுநோய் காரணமாகவும் மற்றும் காணப்படுகின்ற சாரதிகளின் வெற்றிடம், எரிபொருள் பற்றாக்குறை, எரிபொருள் கோட்டா முறைமையினால் எரிபொருள் பரீட்சித்தல் உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. தற்போது எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாத வாகனங்களில் எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கு சம்பவத் திரட்டுப் புத்தகங்களுக்குரிய தரவுகள் சரியாக பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பந்தி | பெறுமதி ரூபா 1,407,600 ஆன கேட்போர்கூட கதிரைகளை வழங்கி பொருத்தும் பெறுகைகளுக்காக தகுதியான கேள்வியாளருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | மொறட்டுவ பல்கலைக்கழக கொள்கையாக ரூபா 02 மில்லியனுக்கு மேற்பட்ட வழங்கல் தொடர்பாக மாத்திரம் செயலாற்றல் பிணைமுறைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுகின்றது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 மார்ச் 01 ஆம் திகதிய இலக்கம் 04/2016 என்ற ஆணைக்குழு சுற்றறிக்கையின் | பல்கலைக்கழக சுய நிதியீட்டல் செயற்பாடுகளில் உழைக்கப்பட்ட வருமானத்தில் 0.01 சதவீதம் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவிற்கு செலவு வைக்க வேண்டியிருந்த | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு இதற்கான பங்களிப்பு வழங்காதிருந்தமையால் பல்கலைக்கழக ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு பாதீட்டில் | ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5.1.6 ஆம் பந்தி | போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சுய நிதியீட்டல் செயற்பாடுகளில் உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 333,238 ஆணைக்குழுவிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | |
| (ii) | 2022 சனவரி 03 ஆம் திகதிய இலக்கம் 01/2022 என்ற பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4(ii) ஆம் பந்தி | 100,001 புத்தகங்களுக்கு மேற்பட்டுக் காணப்படுகின்ற நூலக பிரிவுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மெய்மையாய்வு 03 ஆண்டுகளில் பூர்த்திசெய்ய வேண்டியிருந்த போதிலும் வாசகர்கள் பதிவேட்டின் பிரகாரம் காணப்படுகின்ற 114,758 புத்தகங்கள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த புத்தக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நூலக புத்தகங்களை மெய்மை ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 15/2015 என்ற பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை முதலாவது பந்தி | உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளக பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை திகதியில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் வெளியிடப்படவேண்டிய இருந்த போதிலும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 26 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 03 மாதங்களை விஞ்சி 01 மாதம் முதல் 01 வருடங்களும் 05 மாத கால தாமதமும் ஏற்பட்டிருந்தது. | மீண்டும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பதற்கும் பெறுபேறுகளை தரவேற்றம் செய்யும் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி பெறுபேறுகளை வெளியிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனத்திற்கான தாபனவிதிக் கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழ கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,017,672,383 தொகை சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | மொத்தப் பல்கலைக்கழ முறைமையிலும் மேற்கொள்ளப்படுகின்ற இந்த திட்டமாக இருந்தமையினால் மொறட்டுவ பல்கலைக்கழத்திலும் அந்த முறைமை அமுல்படுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரம் பெறப்படாமல் நிதிக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 902,200.000 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் நடைமுறைக் கணக்குகளில் காணப்படுகின்ற மிகை காசு மீதியை அடிப்படையாகக் கொண்டு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வப் போது மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகளின் போது நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமை மற்றும் அதற்கான காலம் எடுக்கின்றமையினால் நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் II ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 89,099,282 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 170,489,623 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 81,390,341 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆளணி சம்பளங்கள் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த வருமானம் கடந்த ஆண்டினை விட ரூபா 470,329,265 அதாவது 10.67 சதவீதத்தால் அதிகரிப்பைக் காண்பித்ததுடன் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 551,719,606 இனால் அதாவது 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- **நடைமுறை விகிதம்**

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 2.123:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதம் 2.017:1 ஆக இருந்தமையினால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறை விகிதத்தில் சாதகமான நிலைமையொன்று அதிகரித்திந்தது.

- **விரைவு விகிதம்**

மீளாய்வாண்டில் விரைவு விகிதம் 2.096:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டில் அந்த விகிதம் 1.99:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகளை மீறிய 29 விரிவுரையாளர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 62,969,142 தொகை காணப்பட்டது. அதில் 21 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 5,074,425 மற்றும் 31 வருடங்களுக்கும் 41 வருடங்களுக்கும் இடையிலான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,908,708 உம் காணப்பட்டது. | 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த விரிவுரையாளர்களிடமிருந்து தீர்ப்பதற்கு உள்ள தொகையில் ஏதாவது அளவொன்றைப் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட்டுள்ளதுடன் சிலரிடமிருந்து அந்தப் பணத்தையும் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கான இயலுமை காணப்படுகின்றது. தற்போது வரையிலும் அந்த விரிவுரையாளர்களைத் தொடர்புபடுத்தி அந்தப் பணத்தை சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு தமது விருப்பத்தை தெரிவிக்கும் எழுத்து மூல சான்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான எந்தவொரு திட்ட முறைமையும் பல்கலைக்கழகத்திடம் காணப்படவில்லை. | உடன்படிக்கை மற்றும் பிணைமுறைகளை மீறியதன் காரணமாக அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக முறையான திட்ட முறைமையொன்றை ஸ்தாபித்து அறவீடுகளை விரைவாக மேற்கொள்ளல் மற்றும் அந்த அறவீடுகளை கால ரீதியில் பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையங்களின் மூலம் இணைக்கப்படுகின்ற BIT பாடநெறிக்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினால் சேர்க்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை சேர்க்கப்படாமையின் காரணமாக தனியார் நிறுவனங்கள் இரண்டிலிருந்து நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 8,255,000 தொகை 2023 யூலை 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அறவீடுகளை விரைவாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் நிர்வாக பதவியணியினர் அங்கத்தவர்களை உள்ளடக்கிய யுனிக்கன்சல்டன்சி கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்து பல்கலைக் கழகத்தில் அதன் செயற்பாடுகளை நடாத்திச் சென்ற போதிலும் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2023 யூலை 31 ஆம் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரத்தைக் பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் பதவியை கையேற்பதற்காக புவிச்சரிதவியல் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருக்கு ஆளுகைச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2017 நவம்பர் 21 ஆம் திகதி முதல் சம்பளமற்ற விடுமுறைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக சம்பளம் அவருக்கு செலுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. எனினும் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி கூடிய ஆளுகைச் சபையினால் உத்தியோகத்தரின் கோரிக்கையின் அடிப்படையில் 2017 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் ஏழு வருட விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் போது சம்பளம் செலுத்துவதற்கு பெறப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரம் பெறல் அல்லது சம்பளமற்ற காலம் தொடர்பாக கவனம் செலுத்தாமையினால் இந்த உத்தியோகத்தருக்கு பல்கலைக்கழக சம்பளம் நிறுவனம் இரண்டிலிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | விரிவுரையாளர் திசாநாயக்க அவருக்கு 2017.12.01 முதல் 2019.11.30 ஆம் திகதி வரை 379 ஆவது விடுமுறை குழுவின் மூலம் சம்பளத்துடன் ஏழு வருட விடுமுறை அங்கீகரிக்கப்பட்டமையால் உரிய காலத்தில் சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | விடுமுறை கையளிக்கும் குழு மற்றும் ஆளுகைச் சபையினால் ஏழு வருட விடுமுறை அங்கீகரிக்கும் போது அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் மிகவும் புலனாய்வு ரீதியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆராய்ச்சி நிதியத்தின் கணக்கில் ரூபா 10,504,569 மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் இருந்து எந்தவொரு செலவினமும் செய்யப் பட்டிருக்கவில்லை. | இந்த கணக்கிற்கு உரியதான நியதிகளின் பிரகாரம் பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய குறிகாட்டிகளின் பிரகாரம் நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புலமைப்பரிசில் கையளிப்பதற்காக நோக்கமாகக் கொண்டு நீண்டகாலம் முதல் விளைவற்றுக் காணப்படுகின்ற புலமைப்பரிசில் நிதியத்தில் இருந்து ரூபா 13,602,546 தொகை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது விருதுகள் மற்றும் புலமைப்பரிசில் (Awards & Scholarship Account) என்ற பெயரில் புதிய நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் புலமைப்பரிசில் கையளிப்பதற்காக தேவையான அளவுகோல்கள் தயாரிக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போதும் இந்த நிதியத்தை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | விருதுகள் மற்றும் புலமைப்பரிசில் கணக்கு (Policy on Awards & Scholarship Account) இற்கான கொள்கை அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் 2023.01.02 இல் நடைபெற்ற நிதிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிக் குழுவின் பரிந்துரை பெற்று 2023.01.04ஆந் திகதி நடைபெற்ற ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த புலமைப்பரிசில் மற்றும் விருதுகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | உரிய அளவுகோல்களின் பிரகாரம் தாமதமின்றி கால ரீதியில் இந்த விருதுகள் மற்றும் புலமைப்பரிசிலை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திணைக்கள அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 53 கணக்குகளில் ரூபா 179,311,051 தொகையும், பாடநெறி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 36 கணக்குகளில் ரூபா 72,548,888 தொகையும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில் 18 கணக்குகளில் காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 6,040,365 தொகை 06 வருடங்கள் முதலும், 13 கணக்குகளின் காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 9,267,103 தொகை மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பணம் சுய உழைப்பாக இருந்ததுடன் உரிய பிரிவுத் தலைவரினால் இனங்காணப்படுகின்ற பதவியணியினர் மற்றும் மாணவர் செயற்பாடுகள் ஆய்வுகூடம் மற்றும் திணைக்கள உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிதியத்தை குறித்துரைத்த காலத்தில் செலவிட வேண்டிய வெளி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பணம் அல்லாதிருந்தமையால் செலவினங்கள் செய்யாமல் ஒதுக்கமாக வைத்துக்கொள்ளல் பிரச்சினை ஒன்று இல்லாதிருந்தது. | அபிவிருத்தி நிதியம் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்கள் முதல் 12 வருடங்களுக்கு இடையிலான காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 25,248,814 ஆன 30 புலமைப்பரிசில் நிதியங்களில் எந்தவொரு புலமைப்பரிசிலும் கையளிக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | புலமைப்பரிசில் நிதியத்தை மாணவர்களுக்காக கையளிப்பதற்கு அந்தந்த புலமைப்பரிசில் நிதியத்தின் எடுகோல்களை நியதிகளை பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் காணப்படாமை அல்லது போதியளவான நிதி காசு மீதி காணப்படாமையினால் நிதி பயன்படுத்தப்படவில்லை எனினும் இது தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இவ்வாறு செயலிழந்தமைக்காக தாக்கமளித்த பிரதான விடயங்களை மீளாய்வு செய்து புலமைப்பரிசிலை கையளிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய 12 பேர்ச் அளவு 50 வருடகாலத்திற்காக 2009 ஒக்டோபர் 14 ஆம் திகதி குத்தகை உடன்படிக்கை கீழ் ரூபா 1,400,000 கிரயத்தில் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கைப் பிரகாரம் காணியின் அபிவிருத்திப் பணிகள் உடன்படிக்கை திகதியிலிருந்து 06 மாதங்களில் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்களில் பூர்த்தி செய்வதற்கு தவறுமாயின் வாடகை உடன்படிக்கை சுயமாக இரத்து செய்யப்பட்டு காணியின் உரித்து வாடகை உரிமையாளருக்கு உரித்தாகின்றமையான ஒப்பந்தம் உள்ளாகின்ற நிபந்தனை பல்கலைக்கழகத்தினால் மீறப்பட்டமையின் அடிப்படையில் உடன்படிக்கை சுயமாக இரத்து செய்யப்பட்டமைக்கு 2018 பெப்ரவரி 27 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபை கடித மூலம் அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் காணியை குத்தகைக்கு எடுப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 1,400,000 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | இந்தக் காணியை இரத்து செய்வதற்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அறிவிக்கப்படாதிருந்தமையால் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இது தொடர்பாக இரத்து செய்தல் ஒன்று குறிப்பிடப்படவில்லை. அதனால் இது தொடர்பாக காணியின் வாடகை உடன்படிக்கையை தொடர்ந்தும் அமுல்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதறற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறில்லையாயின் செலுத்தப்பட்டுள்ள செலவினங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக நிதிக் குழு மற்றும் ஆளுகை சபை தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபை பதிலின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான தீர்மானங்களை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற பீடங்களை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய வியாபார பீடத்தை ஸ்தாபிப்பதற்காக 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உரித்து கையளிக்கப்பட்ட பிட்டிப்பனவில் அமைந்துள்ள 20 ஏக்கர் காணியில் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளாமையின் அடிப்படையில் 2021 பெப்ரவரி 08 ஆம் திகதிய இலக்கம் 10/08/3289 என்ற நகர அபிவிருத்தி அதிகார சபையின் கடிதத்தின் பிரகாரம் இந்தக் காணி வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்குவதற்கு இணங்காணப்பட்டிருந்தமையும் அது பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்து. | இந்தக் காணியும் மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் அந்தக் காணி பல்கலைக் கழகத்தால் உரிமை கோரப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியில் தேங்காய் விளைச்சல் வருமானம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்தக் காணியை ஒரு செயற்றிட்டம் ஒன்றிற்**காக** நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்று உரிய அபிவிருத்திப் பணிககளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பட்டபின்படிப்பு கற்கை பீடத்தில் கேட்போர் கூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,**407,600** பெறுமதியான 60 கேட்போர்கூட கதிரைகள் மற்றும் ரூபா 4,948,020 பெறுமதியான 02 கெமறாக்களை உள்ளடக்கிய துணைப்பாகங்கள் 2023 சனவரி 22 ஆம் திகதி வரையிலும் திட்டமிடப்பட்ட கேட்போர் கூடத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக நூலகத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. கேட்போர்கூட கதிரைகளில் ஒருவருட உத்தரவாத காலம் மற்றும் கெமறாக்களில் 03 வருட உத்தரவாத காலத்தில் பயன்படுத்துவதற்கு முன்னர் காலவதியாகி இருந்தது. | கேட்போர் கூடத்தின் நிர்மாணங்கள் தாமதமடைந்த போதும் இதுவரை கதிரைகள் பொருத்தப்படாமையினால் நூலகத்தில் கூட்டங்கள் மற்றும் தேவையின் பிரகாரம் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நூலகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. கெமறா உபகரணங்களைப் பொருத்துவதற்கு கேட்போர் கூடத்தில் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அதுவரை அதற்குரிய நிலையங்களில் பொருத்தப்படவில்லை. அந்தக் கெமறா உபகரணங்களில் பொருத்தப்படாமலிருந்த போதிலும் விடயங்களில் தனித்தனியாக நூலகத்திலும் மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கை பீடத்திலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட கேட்போர் கூடத்தின் நிர்மாணத்தை விரைவாக பூர்த்தி செய்து கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள ரூபா 2,894,247 பெறுமதியான டோனர்கள் மற்றும் 346 காட்ரிச் என்பவற்றை பயன்படுத்துவதற்கான இயலுமையை பரீட்சித்த போது தேவையான பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டமைக்கு பயன்படுத்த முடியாத இருப்பாக அகற்றப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தமையும் கடந்த ஆண்டின் போது கணக்காய்வுக்கு அறிக்கையிடப்பட்ட போது 2023 ஏப்ரல் மாதம் வரையிலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த டோனர் மற்றும் காட்ரிச் தேவையான பிரிவுகளில் காணப்பட்டதா என என்பது தொடர்பாக மேலும் கண்டறிந்து அதற்காக தேவையான போதியளவான நிறுத்தி வைத்தல்கள் எதிர்வரும் இருப்புத் தொடர்பாக விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தேவைகளை இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் கொள்வனவு செய்யப்படுகின்ற இருப்புகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்தின் மாணவர் சிற்றுண்டிச்சாலைக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற உணவுப் பொருட்கள் முகாமைத்துவத்தில் இருந்து உயிரியல் வாயு உற்பத்தி செய்து அந்த வாயுவை சிற்றுண்டிச்சாலை உணவகத்துக்கு உணவு தயாரிப்பதற்காக பயன்படுத்தும் பூர்த்தியான செயற்திட்டமொன்று 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி ரூபா 1,434,319 செலவில் | பிரதான மீள்சுழற்சி செயற்பாடு இயந்திரத்தில் (Reactor) காரணமாக அமுல்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன் கடந்த கலத்தின் போது ஒதுக்கப்பட்ட மூலதன நிதியம் குறைவாக இருந்தமையால் மாற்று நிதிய மூலத்திலிருந்து உடனடியாக இந்த வலுக்களை சரிசெய்து உரிய வலு கூடத்திற்கு சமமான செயற்பாட்டு | நிர்மாண வழுக்களை சரிசெய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஸ்தாபிக்கப்பட்ருந்த போதிலும் அதில் உற்பத்தி செய்யப்படுகின்ற உயிரியல் வயுவின் அளவு சிற்றுாண்டிச்சாலைக்கு அடுப்புகளை எரியவைப்பதற்கு போதியளவாக இல்லாதிருந்தமையால் அந்த முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. 2023 யூலை 30 ஆம் திகதி வரையிலும் அதனை அபிவிருத்திசெய்து பயன்பாட்டுக்கு எடுக்காமையினால் பல்கலைகழகத்தினால் செலவிடப்பட்ட ரூபா 1,434,319 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | | நிலைமைக்கு கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.5 செயறதறிட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்துக்கு மேலதிகமாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதை பலநோக்கக் கட்டடிடமொன்று பொறியியல் பீடத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு 06 மாதங்களில் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு ரூபா 159,790,000 பெறுமதியான ஒப்பந்தம் 2014 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும், மேற்கூறப்பட்ட நிர்மாண ஒப்பந்தத்தின் கீழ் பூர்த்தி செய்யப்படாத பணிகள் 08 மாத காலத்தில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 153,141,553 பெறுமதியான புதிய ஒப்பந்தம் ஒன்றும் 2020 ஒக்டோபர் 14 ஆம் திகதியிலும் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நிர்மாணங்களுக்காக 08 வருடங்களும் 03 மாதங்களும் கடந்திருந்ததுடன் ரூபா 310,740,961 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் பூர்துதி செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தவறியிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | ஒப்பந்தகாரரின் நிர்மாணப்பணிகளுக்கு நெருங்கியதாக மேற்பார்வைகளுக்கு உட்படுத்தி விரைவாக பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டிடக்கலை பீடத்தின் கட்டடத்திலும், பொறியியல் பீடத்துக்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கக் கட்டிடத்தினதும் கூரைத் தகடுகள் நியமத்தில் இடப்படாதிருந்தமையினால் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு முன்னர் சகல தகடுகளும் அகற்றப்பட்டு மீண்டும் தகடுகள் இடுவதற்கு இரண்டு கட்டிடங்களுக்காக ரூபா 14,056,253 மேலதிக செலவினமொன்று பல்கலைக்கழகத்தால் செலவிட வேண்டியிருந்தது. இந்தப் பணத்தை ஆலோசனை சேவை வழங்கும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடுவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | ஒப்பந்தகாரரின் வேலைகளை மேற்பார்வைக்கு உட்படுத்தி நியமங்களின் பிரகாரம் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் இதன் ஆலோசனை சேவை வழங்குகின்ற அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் இருந்து இந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் கல்விசார் பதவி அணியினரில் காணப்பட்ட 190 வெற்றிடங்கள் நிரப்பாமையின் காரணமாக வெளிவாரி விரிவுரையாளர்களைச் சேர்த்து மீளாய்வாண்டின் போது ரூபா 38,730,873 படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய பதவிகளுக்காக தகைமை பெற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதிருந்தமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததுடன் கல்வி சார் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக் கொள்ளவேண்டி ஏற்பட்டிருந்தது. | கல்விசார் பதவி அணியினரில் காணப்படுகின்ற வெறறிடங்களை நிரப்புவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |